மக்கள் தொகையை அரசியல் ரீதியாக ஆயத்தமாக்குவதா?

# மாநில உரிமைகளை பறிக்கும் தொகுதி மறு சீரமைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவில் எச்சரிக்கை!

**சென்னை, ஏப். 2-**

**நியாயமற்ற முறையில் தொகுதி மறு சீரமைப்பு கொண்டு வரப்படுகிறது என்றும், மாநில உரிமைகளை பறிக்கும் அபாயம் உண்மையானது. அது மிக அருகாமையில் வந்து விட்டது என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

மக்களை தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பின் அபாயம் குறித்து அவுட்லுக் இந்தியா இதழில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் எழுதியுள்ள செய்திக்கட்டுரையை சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சமூக வலைதள பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.




அதில், நியாயமற்ற முறையில் தொகுதி மறுசீரமைப்பு கொண்டு வரப்படுகிறது, அது முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்கள்தொகையை அரசியல் ரீதியான ஆயுதமயமாக்குவதாக உள்ளது என்று முதலமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தியா இப்போது ஒரு குறுக்கு வழியில் நிற்கிறது. இப்போது நம் மூதாதையர் விரும்பிய கூட்டாட்சி தத்துவத்தை நாம் பாதுகாக்க வேண்டுமா அல்லது கலாச்சார ரீதியான ஒற்றை ஆட்சியை மறைக்கும் ஒரு வெற்று பெரும்பான்மைவாதத்திற்கு சரணடைவதா என்பது குறித்து நாம் முடிவெடுக்க வேண்டிய சூழலில் நிற்கிறோம் என்று முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் மாநில உரிமைகளை பறிக்கும் அபாயம் உண்மையானது மிக அருகாமையில் வந்து விட்டது என எச்சரித்துள்ள முதலமைச்சர், நமக்காகப் பேசுவதன் மூலம் நாம் அனைவருக்காகவும் பேசுகிறோம் என தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச்சட்டம், கூட்டாட்சி தத்துவம் மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு இந்திய குடிமகனும் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பை எதிர்த்தாக வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதில் அறிவுறுத்தியுள்ளார்.

# ஆறுகளின் கரைகளை ஆண்டுக்கு ஒருமுறை செப்பனிட நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் துரைமுருகன் உறுதி!



சென்னை, ஏப். 2-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**செ.ராஜேஷ் குமார்:** சிற்றாறு பட்டணங்கால் தொடர்ந்து மோசமாக இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய shutter எல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. tail end கடைவரம்பு நிலங்களுக்கு தண்ணீர் வரவில்லை. அங்கு இருக்கக்கூடிய குளங்களையும் இந்த முறை நிரப்ப முடியவில்லை. அதைப் போர்க்கால அடிப்படையில் தூர்வாரி உடைந்த shutterகளை எல்லாம் சீர்செய்துதர முடியுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்களின் கோரிக்கை சரியானது தான்; பட்டணங்கால் மட்டுமல்ல கோதையாறும் அப்படித்தான் இருக்கிறது. மற்ற அணைகளும் அப்படித் தான் இருக்கின்றன. கடந்த பெரும்புயலில் கரைகள் எல்லாம் அடிக்கப்பட்டது. ஆகையினால் பொதுவாக ஆறுகளில் எல்லாம் மீண்டும் கரைகள் கட்ட வேண்டுமென்பது எனக்கு சரியாக கோரிக்கை தான்.


முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, நிதி நிலைமைக்கு ஏற்றபடி ஒவ்வொரு வருடத்திற்காவது ஒரு ஆற்றின் கரைகள் கட்டப்பட்டு, மீண்டும் உங்களுக்கு நீர்ப்பாசனம் சரியாக நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டதாக கூறுவது தவறு!

## அமைச்சர் ஐ.பெரியசாமி – அண்ணாமலைக்கு பதிலடி!



சென்னை, ஏப். 2-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்ட திட்டத்தின் கீழ் நிதி மற்றும் மனித சக்தி நாட்களை குறைத்து இத்திட்டத்தினை நீர்த்து போகும் நடவடிக்கைளை தவிர்த்து, தமிழ்நாடு போல் அனைத்து மாநிலங்களையும் சிறப்பாக இத்திட்டம் செயல்பட ஒன்றிய அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவுறுத்தியுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் குறித்து தமிழ் நாடு பாரதிய ஜனதா கட்சி மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்ட செய்திக்கு மறுப்பு தெரிவித்து அமைச்சர் இ.பெரியசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்தின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறுவது தவறான கருத்து என அமைச்சர் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் உள்ள மக்கள் இதர சில மாநிலங்களை ஒப்பிடுகையில் கல்வி, விழிப்புணர்வு, மாநில மற்றும் ஒன்றிய அரசு திட்டங்கள் தொடர்பான புரிதல் ஆகியவற்றை அதிகம் கொண்டுள்ளதால் இத்திட்டங்கள் மூலம் பயன்பெற்று வருகின்றனர் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உத்திரபிரதேசம், ராஜஸ்தான். பீகார் போன்ற பரப்பளவில் மற்றும் மக்கள் தொகையில் அதிகம் உள்ள மாநிலங்கள் தமிழ் நாட்டை போன்று இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி ஒன்றிய அரசிடமிருந்து அதிக நிதி பெறுவது எப்படி என அண்ணாமலை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்காமல், சிறப்பாக செயல்படும் தமிழ் நாடு அரசின் நிர்வாகத்தின் குறை கூறுவது எந்த விதத்தில் நியாயம் என்றும் அவர் வினவியுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை பொறுத்தவரை திட்டத்திற்கான நிதி என்று ஒதுக்கீடு செய்யாமல் ஒவ்வொரு மாநிலத்திலும் எத்தனை மனித சக்தி வேலை நாட்கள் என்ற அடிப்படையில் தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2021-22 முதல் 202425 வரையிலான 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஆண்டிற்கு சராசரியாக 67 லட்சம் குடும்பங்களை சேர்ந்த 77 லட்சம் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஒன்றிய அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதியை குறைத்து வழங்கி இத்திட்டத்தை நீர்த்துப் போகச் செய்கிறது என்று அமைச்சர் இ.பெரியசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

52 ஏக்கரில் 70 கோடி ரூபாய் மதிப்பில்

# உதகையில் ‘சுற்றுச்சூழல் பூங்கா’

## சட்டப்பேரவையில் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 2-

சட்டப்பேரவையில் - கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பொன். ஜெயசீலன்:** என்னுடைய கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள தேவாலா என்ற இடத்தில் மத்திய அரசின் மூலமாக ரூபாய் 70 கோடி செலவில் ஒரு பூங்கா அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டு, தற்போது அங்கு இடம் இல்லை என்கிற காரணத்தினால் அந்தத் திட்டம் உதகைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

70 கோடி ரூபாய் மட்டுமல்ல அதோடு சேர்த்து பொது மற்றும் தனியார் பங்களிப்போடு, மேலும் 115 கோடி ரூபாய் செலவில், அதாவது ஒட்டுமொத்தமாக 185 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டம் செயல்படுத்துவதாக அறிவிக்கப்பட்டு, 2,500 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் எங்கள் ஊர் மக்களெல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

ஆனால், அந்தத் திட்டம் இப்பொழுது உதகைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஏனென்று தெரியவில்லை? அதனை என்னுடைய கூடலூர் சட்டமன்றத் தொகுதியிலே தகுதிவாய்ந்த இடத்தில் நிறைவேற்றி தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** நீலகிரி மாவட்டம், தேவாலாவிலே ஒன்றிய அரசின் மூலம் 70 கோடி ரூபாய்க்கு சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நிச்சயமாக அந்தப் பகுதியிலே அந்த நிதியின் அடிப்படையிலே அமைக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், உதகையிலே 52 ஏக்கரில் 70 கோடி ரூபாய் மதிப்பிலே சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்காக நிதி அமைச்சர், முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அறிவித்திருக்கிறார்கள்.

அதுவும் நிறை வேற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதப் போக்கை கண்டித்து

# இளைஞர் அணி சார்பில் மன்னார்குடி தொகுதியில் கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - இரா.சபாபதி மோகன் பங்கேற்றனர்!

திருவாரூர், ஏப். 2 -

தமிழ்நாட்டில் கட்டாய இந்தித் திணிப்பு, நிதிப்பகிர்வில் பாரபட்சம், தொகுதி சீரமைப்பில் அநீதி போன்ற, ஒன்றிய பி.ஜே.பி. அரசின் ஜனநாயக விரோதப் போக்குகளை கண்டித்து இளைஞர் அணி சார்பில் மன்னார்குடி தொகுதி வடுவூரில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா. இளையராஜா, இளம் பேச்சாளர் மரு.சே. அக்க்ஷயா, மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ். குமார் உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.கே. முருகானந்தம் வரவேற்புரை வாசித்தார். தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தொகுதி பார்வையாளர் ராஜா. சீனிவாசன், ஒன்றிய செயலாளர் நா.கவியரசு, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.வினோத் குமார், எம். பி.எடிசன், சி.கே.எஸ். எழிலரசன், எஸ். கல்யாண சுந்தரம், தாகீர் அலி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத் தலைவர் க.தனராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம். எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், ஒன்றிய செயலாளர்கள் வி. எஸ்.ஆர்.தேவதாஸ், பாலஞானவேல், நகர கழக செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி முத்துவேல், சித்தேரி சிவா, கே.வி.கே.ஆனந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். எஸ்.பாண்டியன், ப. ஆடலரசன், டி.செல்வம்,த. கணபதி, பொதுக்குழு உறுப்பினர்கள் கமாலுதீன், ராஜபூபாலன், கலைவாணி மோகன், காஞ்சிதுரை, பேரூர் செயலாளர் ராஜசேகரன், அறங்காவல் குழு தலைவர் சி.இளவரசன், இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர்கள் கமலஹாசன், திராவிட சுடர், சண்.சுதாகர், ஆர்.தங்கபாரத்தி, ஆர்.அரவிந்தன், கா.மணிவண்ணன், பாலா, ஜெகன் மணிராஜ் மற்றும் துணை அமைப்பாளர்கள்.

மேலும் ஒன்றிய நகர,பேரூர் கழகங்களின் அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளானோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.



ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதப் போக்குகளை கண்டித்து இளைஞர் அணி சார்பில் மன்னார்குடி தொகுதி கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் நா.இளையராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். முரசொலி எம்.பி., தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தொகுதி பார்வையாளர் ராஜா.சீனிவாசன், ஒன்றிய செயலாளர் நா.கவியரசு, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், துணை அமைப்பாளர்கள் வி.கே.முருகானந்தம், வி.வினோத்குமார், எம்.பி.எடிசன், சி.கே.எஸ்.எழிலரசன், எஸ்.கல்யாண சுந்தரம், தாகீர் அலி உள்ளிட்டோர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

கோடை வெயிலால் தவிக்கும்

# பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



சென்னை, ஏப். 2 -

கோடை வெயிலையொட்டி பறவைகளுக்கு தண்ணீர் மற்றும் உணவு அளிப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவில்

**“கோடை வெயிலால் தவிக்கும் பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம்!”** என்று பதிவிட்டுள்ளார்.